## அறிவித்தல் இல. R/2026/11

## வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களது CP/DEC/26 இலக்க 2026.03.11ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2026.03.03ம் திகதிய அமைச்சரைவைக் கூட்டத் தீர்மானம் மற்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அவர்களினது NP/31/01/Appoint.Gen இலக்க 2026.04.25ம் திகதிய கோரிக்கை ஆகியவற்றுக்கு அமைவாக, வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் **தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III** பதவிக்கு காணப்படும் **ஐம்பத்திரண்டு (52)** வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சையானது, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் 2026ம் ஆண்டு யூலை மாதமளவில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2026.06.12** ஆகும்.

### 02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :

02.1 2014.07.10ம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் - பிரிவு 3 சேவை வகுதியின் (MT-01-2006A) தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) சேவைக்குரிய சேவைப்பிரமாணக்குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றுக்கு அமையவும் தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ம் இலக்க 2013.07.03ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை மற்றும் இப்பதவியுடன் தொடர்புபட்டு, காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் விதிகள், கட்டளைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த **தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III** இற்கு நியமிக்கப்படுவர்.

02.2 இப் போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள், தமது நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் **தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப்பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று (03)** வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

02.4 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03)** வருடங்கள் முடிவதற்கு முன்னரான (சேவையில் உறுதிப்படுத்த முன்னராக) தகுதிகாண் காலப்பகுதிக்குள் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

அரச கரும மொழி தவிர்ந்த மொழியொன்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுமிடத்து பதவியில் உறுதிப்படுத்த முன்னர் அரச கரும மொழியொன்றினை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

02.5 திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை **ஐம்பத்திரண்டு (52)** ஆகும். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

### 03. சம்பள அளவுத்திட்டம் :

2025.03.25ம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MT 1 - 2025**க்கு ஏற்ப தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டமானது ரூபா. **50,090 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 - 84,420/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்

பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

### *04. பொதுவான தகைமைகள் :*

*04.1* விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

*04.2* விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றக்கூடிய சிறந்த உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

*04.3* விண்ணப்பதாரி இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதிக்குள், வடக்கு மாகாணத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் தொடர்ச்சியாக நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(*நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் பிரித்தெடுப்பிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்)*

அல்லது

விண்ணப்பதாரர் அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(*நேர்முகப் பரீட்சையின் போது தமது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலின் பிரித்தெடுப்பிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்)*

*04.4* விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் **இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** இவ்விளம்பரத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*04.5* விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று **18 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

### *05. தகைமைகள் :*

#### *05.1 கல்வித் தகைமைகள் :*

க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது **மொழி அல்லது இலக்கியம்** (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), **கணிதம் மற்றும் வேறு ஏதாவது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி** (Credit Pass) உட்பட **ஆறு (06)** பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். **இதில் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில்** சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

#### *05.2 தொழில்சார் தகைமைகள் :*

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து இரண்டு வருட **"விவசாய டிப்ளோமா"** சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2012 மற்றும் இதனுடன் தொடர்பான ஏனைய சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய, இப் பதவிக்குப் பொருத்தமான தேசிய தொழில் தகைமை மட்டம் - 5 (NVQ Level - 5) இனை முன்னிலைப்படுத்தும் தொழில்நுட்ப சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

மேற்கூறப்பட்ட தகைமைகளுக்கு சமமானவையென மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை :

06.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், சேவைப்பிரமாணக்குறிப்பு, தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும்.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் உயர்வரிசை ஒழுங்கில், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 125% சதவீதத்தினர் நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

06.3 எவ்வாறாயினும், எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் உயர் ஒழுங்கு வரிசையில் (Merit Order), சகல தகைமைகளையும் பூர்த்தி செய்தவர்கள் **வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப** தெரிவுசெய்யப்படுவர்.

06.4 தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். இவ்விளம்பரத்தின் மூலம் கோரப்பட்ட சகல தகைமைகளும், அதனை நிரூபிக்கும் ஆவணங்களும் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். ஆயினும், நேர்முகத் தேர்வின் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

## 07. பரீட்சைக் கட்டணம் :

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா. 500/- ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :

08.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/230"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

08.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படுவதானது, விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

08.4 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

08.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: 021 221 9939 / தொலைநகல் இல: 021 221 9940 / மின்னஞ்சல்: **examppscnp@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.

- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

### *09. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :*

*09.1* பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

*09.2* மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகத்தையும், மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சைமண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

### *10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :*

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருவாராயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

### *11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :*

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர் மற்றும் நெருங்கிய உறவினர் அல்லாத ரூபா. 854,880.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

### *12. பரீட்சைத் திட்டம் :*

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான இரு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழி மூலத்தை தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் அந்த மொழி மூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| இல | வினாத்தாள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | உளச்சார்பு பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. | பொது அறிவு (பதவியுடன் தொடர்புடைய தொழில்நுட்பம் மற்றும் விடய அறிவு) | 01 மணித்தியாலம் | 100 | 40 |

**(பாடவிதானம் : இணைப்பு - I இல் காட்டப்பட்டுள்ளது.)**

குறிப்பு :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் **நாற்பது (40%)** புள்ளிகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

## *13.* பரீட்சைப் பெறுபேறுகள் :

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் **www.np.gov.lk** என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழையும் **www.np.gov.lk → Exams & Recruitments → Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-**

(i) இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை **www.np.gov.lk** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

**ஆழ்வாப்பிள்ளை சிறி,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*2026.05.22*

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | உளச்சார்பு பரீட்சை | இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரரின், தர்க்க ரீதியான சிந்தனை, பகுப்பாய்வு சிந்தனை மற்றும் தீர்மானம் எடுக்கும் இயலுமை ஆகியவற்றை உள்ளடக்கிய குறுகிய மற்றும் ஆக்கபூர்வமான வினாக்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டிருக்கும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | பொது அறிவு (தொழில்நுட்ப அறிவு மற்றும் விடயங்கள் தொடர்பான பரீட்சை) | 1. **இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத் துறையின் பங்களிப்பு. (Cntribution of Agriculture Sector for the Economical development of Sri Lanka)**<br>1.1. மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயத் துறையினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு.<br>1.2. வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.<br>1.3. விவசாயத்துறையுடன் தொடர்பான இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் நிலைமை.<br><br>2. **இலங்கையின் சீதோசன வலயங்கள் தொடர்பான அறிவு. (Knowledge regarding Climate Zones of Sri Lanka)**<br><br>3. **மண் மற்றும் தாவரப் போசனை (Soil and Plant Nutrition)**<br>3.1. பயிர்ச்செய்கையில் மண்ணின் தன்மை, கட்டமைப்பு, ஈரப்பதன், உவர்ப்புத்தன்மை, பௌதீக மற்றும் இரசாயனவியல் நிலைமைகளின் வினைத்திறன்.<br>3.2. தாவரங்களுக்கு மண்ணிலிருந்து கிடைக்கும் போசனைகள் மற்றும் தாவரப்போசனைகளின் முகாமைத்துவம்.<br>3.3. தாவரப்போசனை தொடர்பான விசேட அம்சங்கள்.<br><br>4. **நெல் உற்பத்தி (Paddy Production)**<br>4.1. மண் சீதோசன தேவைப்பாடு.<br>4.2. இனங்கள்.<br>4.3. நிலம் பண்படுத்தல் மற்றும் நாற்றுமேடை முகாமைத்துவம்.<br>4.4. பீடை மற்றும் நோய்க் கட்டுப்பாடு.<br>4.5. உரம் பாவித்தல்.<br>4.6. நீர் முகாமைத்துவம் / விளைச்சலை அதிகரிப்பதற்கான நவீன முறை.<br>4.7. அறுவடை / அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம்.<br><br>5. **மறுவயல் பயிர்களின் உற்பத்தி (Other field crop production)**<br>5.1. பெரிய வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, சோளம் மற்றும் ஏனைய பயிர் இனங்கள்.<br><br>6. **மரக்கறி உற்பத்தி (Vegetable Production)**<br>6.1. மரக்கறி நாற்றுமேடை முகாமைத்துவம்.<br>6.2. விவசாயத் திணைக்களத்தின் விசேட கவனத்திற்குள்ளாயிருக்கும் மரக்கறி வகைகளின் அறிமுகம், அறுவடை மற்றும் முன்னெடுத்தல்.<br><br>7. **பழங்கள் (Fruits)**<br>7.1. விவசாயத் திணைக்களத்தின் விசேட கவனத்திற்குள்ளாயிருக்கும் பழவர்க்கங்களை அறிமுகம் செய்தலும் நடுகை நடவடிக்கைகளும்.<br><br>8. **பயிர்ப் பாதுகாப்பு. (Crop Protection)**<br>8.1. பிரதான பீடைகள் மற்றும் நோய்களை இனம்காணுதலும் முகாமைத்துவ முறைகளும்.<br>8.2. களை எடுத்தலும் களைக்கட்டுப்பாட்டு முறைகளும். | 01 மணித்தியாலம் | 100 |

8.3. பூச்சிநாசினிகளைப் பயன்படுத்தும்போது உள்வாங்கப்பட வேண்டிய பாதுகாப்பு முறைகள்.

9. **நீர் ஊடுருவலும் அதன் முக்கியத்துவமும். (Water Percolation and its importance)**

10. **மண் இரசாயனவியல் (Soil Chemistry)**
    10.1. மண் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் பலவிதமான மண் பாதுகாப்பு முறைகளும்.

11. **நீர்ப்பாசனமும் மற்றும் நீர் முகாமைத்துவமும் (Irrigation and water management)**
    11.1. பல விதமான பயிர்களுக்கு பொருத்தமான நீர்ப்பாசன முறைகளும் மற்றும் அதன் நீர் முகாமைத்துவமும்.
    11.2. நுண் நீர்ப்பாசன முறைகள்.

12. **பண்ணை இயந்திரவியலாக்கம் (Farm Mechanization)**
    12.1. பண்ணை இயந்திரவியலாக்கலின் நன்மையும் தீமையும்.
    12.2. நிலம் பண்படுத்தலின்பொழுது உபயோகிக்கப்படும் விவசாய இயந்திர உபகரணங்கள்.
    12.3. நீர்ப்பாசனத்தின் பொழுதும் மற்றும் தாவர பாதுகாப்பின் பொழுதும் உபயோகிக்கப்படும் விவசாய இயந்திர உபகரணங்கள்.
    12.4. மேற்குறித்த இயந்திர உபகரணங்களை இயக்குதலும் பராமரித்தலும்.

13. **தேனீ வளர்ப்பு (Bee Keeping)**
    13.1. பொருளாதார முக்கியத்துவம்.
    13.2. தேனீக்குழாத்தை தாபித்தலும் பேணுதலும்.
    13.3. சந்தைப்படுத்தலுக்காக அறுவடை செய்தலும் பதப்படுத்தலும்.

14. **பூமரச் செய்கையும் மற்றும் அலங்காரத் தோட்டம் அமைத்தலும் (Floriculture and Landscaping)**
    14.1. பொருளாதார முக்கியத்துவம்.
    14.2. அலங்காரத் தோட்டம் அமைக்கும் முறை.
    14.3. விற்பனையின் பொருட்டு வெட்டுப்பூக்களை உற்பத்தி செய்தலும் மற்றும் அவைகளை சந்தைக்கு ஏற்ப பதனிடுதலும்.

15. **பாதுகாப்பளிக்கின்ற பயிர்ச்செய்கை. (Protective Crop Cultivation)**
    15.1. அதன் முக்கியத்துவம்
    15.2. திட்டமிடுதல்.
    15.3. பயிர்களின் தெரிவு.
    15.4. அறுவடையின் பராமரித்தலும் பதனிடுதலும்.

16. **விலங்கு வேளாண்மை (Animal Husbandry)**
    16.1. கோழிவளர்ப்பும் பால் உற்பத்தியும்.
    16.2. கலப்பு வேளாண்மைப் பண்ணை முறையின் கீழ் விலங்குற்பத்தியினை பராமரித்தல்.

17. **விவசாய விரிவாக்கம். (Agriculture Extension)**
    17.1. விவசாய விரிவாக்கத்தின் முறைமையும், தந்திரோபாயங்களும்.
    17.2. விவசாய விரிவாக்கத்தின் தொடர்பாடல் முறைகள்.

18. **இளைய வளர்ப்பு. (Tissue Culture)**
    18.1. இளைய வளர்ப்பின் அடிப்படைச் சித்தாந்தம் மற்றும் கடந்தகால விபரங்கள் தொடர்பான அறிவு.
    18.2. பயன்பாடுகளின் எடுத்துக்காட்டுக்கள் / இளைய வளர்ப்பின் பயன்பாடு.
    18.3. இளையவளர்ப்பின் நன்மைகளும் தீமைகளும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | 19. தாவர பாதுகாப்பு சட்டம் தொடர்பான அறிவு.<br>**(Knowledge regarding plant protection law)**<br>19.1. தாவர பாதுகாப்பு சம்பந்தமான விதிகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான அறிவு.<br>19.2. தாவர பாதுகாப்பு முறைமை.<br><br>20. தாவரப் பாதுகாப்பு. **(Plant Conservation)**<br>20.1. தாவரப் பாதுகாப்பின் முக்கியத்துவம் [தாவரம் (Plant) / மரபணு பிளாஸ்மா (Gene Plasma)]<br>20.2. தாவரப் பாதுகாப்பு முறைகள். [தாவரம் (Plant) / மரபணு பிளாஸ்மா (Gene Plasma)]<br><br>21. உயிரியல் தொழில்நுட்பம். **(Bio-Technology)**<br>21.1. D.N.A இன் முக்கியத்துவம்.<br>21.2. மரபணு (Gene) என்றால் என்ன? மற்றும் அதன் செயற்பாடுகள்.<br>21.3. மரபணு (Gene) தொழில்நுட்பத்தின் மூலம் தாவரங்களை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறு.<br><br>22. விவசாய அபிவிருத்தி. **(Agriculture Development)**<br>தற்போதைய விவசாய அபிவிருத்திக் கொள்கை, அதிலுள்ள முக்கியத்துவம், விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டம், மத்திய மற்றும் மாகாண அமைச்சின் கீழுள்ள விவசாய அபிவிருத்தி மற்றும் தொடர்புடைய திணைக்களங்கள், விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய மத்திய அரசு மற்றும் மாகாண சபையைச் சார்ந்த நிறுவனங்கள், அவற்றின் கடமைகள், விவசாயத் துறையில் தற்காலத்தில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் கருத்துரைகள், தேசிய அபிவிருத்திக்கு விவசாய அபிவிருத்தியானது உதவிபுரியும் வழிமுறைகள், விவசாய அபிவிருத்தித் திட்டங்களில் தாக்கம் செலுத்தும் அனுகூலங்களும் பிரதிகூலங்களும். | | |